# ஆரணி நகராட்சி

# 2022 – 2023

# நிர்வாக அறிக்கை

## ஆரணி நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2022 – 2023

| | | |
|---|---|---|
| 1. | அமைப்பும் மேலாண்மையும் | |
| | 1. | எல்லை வரம்பு |
| | | அ) 31.03.2006 – இன்படி ஆரணி நகரின் பரப்பளவு 9.76 கி. மீ. |
| | | ஆ) நகராட்சி எல்லையில் எவ்வித மாறுதலுமின்றி கீழ்க்கண்ட வருவாய் கிராமங்களை கொண்டது |
| | 1. | புதுக்காமூர் |
| | 2. | ஆரணிபாளையம் |
| | 3. | வண்டிப்பாளையம் |
| | 4. | திருமலை சமுத்திரம் |
| | 5. | கீழ்ஆரணி |
| | 6. | திருமலைராயபுரம் |
| | 7. | அனந்தபுரம் |
| | 8. | சைதாப்பேட்டை |
| | 9. | நாடகசாலைப்பேட்டை தெரு |
| | 10. | தீவட்டித்தாங்கள் |
| | 11. | பையூர் காஜிவாடைத் தெரு |

ஆரணி நகராட்சி அரசாணை எண். 564 (பல்வகை) வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 02.04.1951 – ன்படி மூன்றாம்நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டு , பின்னர் அரசினரின் ( ஊரக வளர்ச்சி மற்றும் அரசாணை எண். 85, நாள் 22.05.1998) – ன்படி (முதல்நிலை நகராட்சியாக )உயர்த்தப்பட்டுள்ளது ) . 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை . 63263 ஆகும் . இதில் 31364 ஆண்கள் , 31899 பெண்கள் ஆகும். மேலும், இந்நகராட்சி அரசாணை 189 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை , நாள் 20.08.1996 –இன்படி 33 வார்டுகளாக பிரித்து அங்கீகரிக்கப்பட்டது.

### நிர்வாக தொகுப்பு

உறுப்பினர்கள்விவரமும் அதில் பொதுமக்கள் ஒதுக்கப்பட்ட வார்டுகள் விவரமும் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் விவரமும் கீழ்க்கண்டவாறு உள்ளது. நகரமன்றத்தலைவர் நகரமன்ற உறுப்பினர்களால் மறைமுக தேர்தல் முறை அமுலில் உள்ளது. 2022 ஆம்ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட வார்டுகள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பொது இடம் | : | 33 |
| 2. | பெண்களுக்காக ஒதுக்கப்பட்டவை (பொது) | | 15 |
| 3. | தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப் – பட்டவை (பெண்கள் ) | : | 2 |
| 4. | தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டவை ( பொது) | | 2 |

| அ) பொறுப்பு அலுவலர்கள் | | | | |
|---|---|---|---|---|
| | விவரம் | | பதவி காலம் | |
| | பெ. தமிழ்ச்செல்வி ,ஆணையாளர் | | 24.11.2021 பிப | 31.03.2022வரை |
| | நெடுமாறன், மேலாளர் | : | 01.04.2021 முதல் | 31.03.2022வரை |

04.03.2022 முதல் 31.03.2022 வரை நகரமன்ற தலைவர் , நகரமன்ற துறைத் தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு

| வார்டு எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| | திரு / திருமதி / செல்வி | |
| 01 | அ.சொ. மணி | நகரமன்ற தலைவர் (நகரமன்ற உறுப்பினர் ) |
| 13 | பாரி பா. பாபு | நகரமன்ற துணைத்தலைவர் (நகரமன்ற உறுப்பினர் ) |
| 02 | தேவராஜ்.வ. | நகரமன்ற உறுப்பினர் |
| 03 | அ.கோ. மோகன் | நகரமன்ற உறுப்பினர் |
| 04 | சி. பாபு | நகரமன்ற உறுப்பினர் |
| 05 | கு. சுதா | நகரமன்ற உறுப்பினர் |
| 06 | பா. பானுப்பிரியா | நகரமன்ற உறுப்பினர் |
| 07 | வி.பி. ராமகிருஷ்ணன் | நகரமன்ற உறுப்பினர் |
| 08 | கு. ரம்யா | நகரமன்ற உறுப்பினர் |
| 09 | அ. இஷ்ரத்ஜபின் | நகரமன்ற உறுப்பினர் |
| 10 | பா. நளினி | நகரமன்ற உறுப்பினர் |
| 11 | கு. வினாயகம் | நகரமன்ற உறுப்பினர் |
| 12 | வெ. பாக்கியலட்சுமி | நகரமன்ற உறுப்பினர் |
| 14 | பெ. பழனி | நகரமன்ற உறுப்பினர் |
| 15 | வ. ரவி | நகரமன்ற உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 16 | ஆ. நடராஜன் | நகரமன்ற உறுப்பினர் |
| 17 | மா.ரிஸ்வானா | நகரமன்ற உறுப்பினர் |
| 18 | பா. சத்யா | நகரமன்ற உறுப்பினர் |
| 19 | சி. உஷாராணி | நகரமன்ற உறுப்பினர் |
| 20 | அ. ரேவதி | நகரமன்ற உறுப்பினர் |
| 21 | செ. பவானி | நகரமன்ற உறுப்பினர் |
| 22 | ம. கீதா | நகரமன்ற உறுப்பினர் |
| 23 | த. அரவிந்தன் | நகரமன்ற உறுப்பினர் |
| 24 | த. ரேணுகாம்பாள் | நகரமன்ற உறுப்பினர் |
| 25 | ர.சொ. சுப்பிரமணியன் | நகரமன்ற உறுப்பினர் |
| 26 | ஆ.சொ. பாபு | நகரமன்ற உறுப்பினர் |
| 27 | து. ஜெயவேல் | நகரமன்ற உறுப்பினர் |
| 28 | மருதேவி | நகரமன்ற உறுப்பினர் |
| 29 | சே. சசிக்கலா | நகரமன்ற உறுப்பினர் |
| 30 | க. கார்த்தி | நகரமன்ற உறுப்பினர் |
| 31 | ச.கிருபாசமுத்திரி | நகரமன்ற உறுப்பினர் |
| 32 | ஆ. அமுதா | நகரமன்ற உறுப்பினர் |
| 33 | சு. சிவக்குமார் | நகரமன்ற உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை | : | 33 |
| பெண் உறுப்பினர்கள் | : | 17 |
| மற்றவை (பொது) | : | 0 |
| தாழ்த்தப்பட்டவர்களுக்கு | : | 2 |
| பெண்கள் | : | 15 |
| பொது | : | 1 |

கூட்டங்கள்

| | |
|---|---|
| 1. | நகரமன்றத்தின் சாதாரண கூட்டம் அந்தந்த மாதங்களில் நடத்தப்பட்டது. அவசியத்தை முன்னிட்டு அவசரக் கூட்டங்கள்அவ்வப்போது நடைபெற்றுஉள்ளது |

| கூட்டங்களின் விவரம் | சாதாரணம் | அவசரம் | சிறப்பு |
|---|---|---|---|
| நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | 6 | 3 | 1 |
| முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை | 178 | 3 | 1 |

| | |
|---|---|
| 2. | நகரமன்றத்திற்கு வைக்கப்படும் பொருட்கள் யாவும் அவ்வப்போது முடிவு செய்யப் படுகின்றன. நகராட்சி நடைமுறை தொகுப்பில் உள்ள முறையின்படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை 3 – இல் கண்டுள்ள விதிகளின்படியம் , மன்றக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. |
| குழுக்கள் : | |
| | அறிக்கையாண்டில் அடியிற்கண்ட குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. |

| நிலையான குழுக்கள் | கூட்டங்களின் எண்ணிக்கை | பொருள்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. நியமனக்குழு | 2 | 2 |
| 2. ஒப்பந்தக்குழு | – | – |
| 3. (1) வரிமேல்முறையீட்டு குழுக்கள் | – | – |
| (2) வட்ட குழுக்கள் | – | – |
| 4. உள்ளூர் திட்டக்குழுமம் | – | – |

**04.03. 2022 முதல் 31 .03.2022 வரை**

| வ.எண் | விவரம் | : | பெயர் |
|---|---|---|---|
| | திரு/ திருமதி / செல்வி | | |
| 1. | நியமனக்குழு தலைவர் | : | அ.சொ.மணி நகரமன்ற தலைவர் |
| | நியமனக்குழு உறுப்பினர் | : | அ. இஷ்ரத்ஜபின் |
| 2. | ஒப்பந்தக்குழு உறுப்பினர் | : | சி. உஷாராணி |
| | ஒப்பந்தக்குழு உறுப்பினர் | : | – |
| 3. | வரிமேல்முறையீட்டு குழுத்தலைவர் | : | – |
| | | : | எம். ரிஸ்வானா |
| | | : | அ. ரேவதி |
| | | : | எஸ். பவானி |
| | | : | டி. அரவிந்தன் |
| 4. | உள்ளூர் திட்டக்குழு தலைவர் | | – |
| 5. | இணைப்புக்குழுக்கள் அமைக்கப்படவில்லை | : | இல்லை |

**மேலாண்மை**

**அலுவலக பணியாளர்கள் வரிவசூல் செய்யும் பணியாளர்கள் உள்பட அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு செலவு செய்யப்பட்டுள்ளது.**

**ஆணையாளர் சம்பளம் மற்றும் பற்றுச் சீட்டுத்தொகை : 105.71**

**பொது நிர்வாக பணியாளர்கள் (வருவாய் நிதி ) :**

**வசூல் பணியாளர்கள் ( வருவாய் நிதி ) :**

**பொதுசுகாதாரப்பணியாளர்கள் ( வருவாய் நிதி ) : 145.82**

**பொதுசுகாதாரப்பணியாளர்கள் ( குடிநீர் நிதி ) : 108.16**

**பொறியியல் பிரிவு பணியாளர்கள் ( வருவாய் நிதி ) : 418.69**

**பொறியியல் பிரிவு பணியாளர்கள் ( குடிநீர் நிதி ) : 786.90**

**மொத்தம் :**

**இந்நகராட்சி அலுவலகம் சொந்தக்கட்டிடத்தில் போதுமான வசதிகளுடன் இயங்கி வருகின்றது.**

**பணியமைப்பு :**

| வ. எண் | பதவி | பெயர் | பணிபுரிந்த காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| | | திரு / திருமதி / செல்வி | | |
| அ) | பொறியாளர் | த.ராஜவிஜயகாமராஜ் | 01.04.2022 | 31.03.2023 |
| ஆ) | இளநிலை பொறியாளர் | திரு. வி. சம்பத் | | |
| இ) | இளநிலை பொறியாளர் | திரு.ஜெயபிரகாஷ் நாராயணன் | | |

**சாலைகள் , பாலங்கள் மற்றும் கட்டிடங்கள் ஏரிகள்**

**சாலைகள் :**

**இந்நகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலை இலாகாவினால் பராமரிக்கப்படும் சாலகளின் நீளம் 7.845 கிலோ மீட்டர்**

| வ.எண் | சாலைகளின பெயர் | : | நீளம் |
|---|---|---|---|
| 1. | ஆற்காடு ஆரணி வந்தவாசி சாலை | : | 2.816 கிலோ மீட்டர் |
| 2. | ஆற்காடு களம்பூர் சாலை | : | 2.011 கிலோ மீட்டர் |
| 3. | ஆரணி சேத்பட்டு சாலை | : | 0.805 கிலோ மீட்டர் |
| 4. | ஆரணி தச்சூர் சாலை | : | 2.213 கிலோ மீட்டர் |
| 5. | ஆரணி வேலுர்சாலை | : | |
| மொத்தம் | | : | |

ஆ) அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தெருக்களின் சாலைகளின் மொத்தம் நீளம் 81.02 கிலோ மீட்டர்

| வ.எண் | சாலைகளின பெயர் | : | 31.01.2022 |
|---|---|---|---|
| 1. | தார்சாலை | : | 34.42 கி. மீ |
| 2. | சிமெண்ட் சாலை | : | 43.58 கி. மீ |
| 3. | ஜல்லிசாலை | : | 2.039 கி மீ |
| 4. | மண்சாலை | | 0.970 கி. மீ |

சாலைகளும், தெருக்களும் போதுமானதாக விசாலமுள்ளதாக இருக்கின்ற சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புக்களில் ஆட்சேபனைகரமான ஆக்கிரமிப்புகளின் மீது புகார் வந்தவுடன் அப்புறப்படுத்தப்பட்டு ஆட்சேபனை இல்லாதவைகளுக்கு கட்டணம் விதித்தும் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

வண்டி வாகனாதிகளின் மூலம் அரசு வழங்கி வரும் சயாக தொகையும் கீழ்க்குறிப்பிட்டபடி வரப்பெறவில்லை.

| | |
|---|---|
| 1. | வண்டி வாகனாதிகளின் மூலம் நகராட்சி நேரடியாக பெற்ற வரிவசூல் ஏதுமில்லை. |
| 2. | அரசினரின் பொடை மூலம் எதுவும் பெறவில்லை . மாவட்ட கழக நிதியிலிருந்து உதவித்தொகை ஏதும் பெறவில்லை. |

**தோனித்துறை:**

சத்திரங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**கருவிகளும் , தளவாடங்களும்**

இந்நகராட்சிக்கு கையில் இழுக்கும் – வண்டிகளும் , ஒரு கொதிகலன் சாதனமும் சொந்தமான உள்ளன . அதற்கான அறிக்கையாண்ல் செலவு ஏதும் செய்யப்படவில்லை.

**விளக்கு வசதி**

அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன.

**01.04.2021 முதல் 31.03.2022 வரை**

| வ.எண் | விளக்குகள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | குழல் விளக்கு | 1687 |
| 2. | சோடியம் ஆவிவிளக்கு | 587 |
| 3. | சோலா விளக்கு | – |
| 4. | உயர்கோபுர மின் விளக்கு | 18 |
| 5. | எல்இடி விளக்கு | 371 |
| மொத்தம் | | 2654 |

1. அறிக்கையாண்டில் தெருவிளக்கு மின் கட்டணம் : 120.00 இலட்சம்

2. பராமரிப்பு செலவு : 9.50 இலட்சம்

மொத்தம் : 129.50 இலட்சம்

**கல்வி :**

**கல்வி வசதி வாய்ப்பு**

அறிக்கையாண்டில் நகராட்சியில் பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை . நகராட்சி பள்ளிக் கட்டிடங்கள் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**பணியாளர்கள் :**

இந்நகராட்சி பள்ளிகள் அனைத்தும் கல்வித்துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. சார்நிலை கருவூலகத்தின் மூலம் ஊதியம் பெற்று வருகின்றனர்.

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம்**

இந்நகராட்சியில் 5 வயது முதல் 9 வயது மற்றும் 10 வயது முதல் 14 வயது வரையிலுள்ள மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி சத்துணவு மையங்கள் 10 எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு வருகின்றன . பள்ளி மையங்களை நிர்வகிப்பதற்கென தனியாக கணக்கர் பதவி 04.09.1998 முதல் பணிபுரிந்து வருகின்றார்கள். 7 அமைப்பாளர்களும், 9 சமையலர்கள் மற்றும் 5 சமையல் உதவியாளர்கள், இதர அலுவலர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து மாணவ , மாணவியருக்கு வழங்கப்படுகிறது . உணவின் தரம், குடிநீர் வசதி மற்றும் சுற்றுப்புற சுகாதார வசதி, வருகை தரும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை ஆகியவற்றை கண்காணித்தல் உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு நிவர்த்திக்கப்பட்டு வருகிறது.

**இடவசதி மற்றும் தளவாட பொருட்கள்**

அறிக்கையாண்டில் 1 பள்ளிகள் வாடகை கட்டிடங்களிலும் 9 சொந்த கட்டிடங்களிலும் இயங்கி வந்தன. அனைத்து கட்டிடங்களிலும் இடவசதியும், காற்றோட்ட வசதியும் உள்ளது. கட்டிடங்களின் வாடகைக்காக ரூ. 1200 மாத வாடகையாக செலவு செய்யப்படுகிறது.

**ஆரம்பக்கல்வி கணக்கு :**

சொத்துக்களின் ஆண்டு மதிப்பீடு பேரில் வருடத்திற்கு 5 சதவீதம் கல்விவரி வசூலிக்கப்பட்டது. ஆரம்பக்கல்வி சம்மந்தமாக செலுத்த தொகை கீழ்கண்டவாறு ஈடு செய்யப்பட்டது.

| வ.எண் | விவரம் | : | தொகை ரூ |
|---|---|---|---|
| 1. | கல்விவரி வசூல் | : | |
| 2. | கல்விமுன் மான்யம் | : | |
| 3. | பற்றாக்குறை முன்மானயம் | : | |
| 4. | நகராட்டிச நிதியிலிருந்து முன் பணம் மற்றும் பங்குத்தொகை | : | |
| **மொத்தம்** | | : | |

**உயர்நிலைக் கல்வி**

இந்நகராட்சியில் உயர்நிலை பள்ளிகள் 2 பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**சிறப்பு பள்ளிக்கூடங்கள்**

இந்நகராட்சியில் சிறப்பு பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**பொது Ehல் நிலையங்கள்**

மாவட்ட Ehலக குழுவினரால் ஒரு பொது Ehல் நிலையம் இந்நகரில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியனரால் 2 படிப்பகங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**பொது சுகாதாரம்**

இந்நகராட்சியில் 3 தாய்சேல விடுதிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன . தாய்சேய் நல விடுதிகளுக்கு 1 மகப்பேறு உதவியாளர்களும் 2 மகப்பேறு ஆயாக்களும் பணி புரிந்து வருகின்றனர். தாய்சேய் நல விடுதிகள் பராமரிப்பிற்காக 7 உதவியாளர் மற்றும் 8 மகப்பேறு ஆயா பணியிடம் காலியாக உள்ளது. தாய்சேய் நல விடுதிகள் பராமரிப்பிற்கு அறிக்கையாண்டில் 15.00 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது . இது சென்ற ஆண்டின் கூடுதல் ரூ. 2.40 இலட்சம் செலவு ஆகும்.

**பிறப்பு , இறப்பு விகிதம் , மகப்பேறு நிவாரணமும்**

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரில் மொத்த மக்கள் தொகை 63263 ஆகும். இந்நகராட்சியின் பிறப்புகள் 82 ஆகும். இறப்பு 459 ஆகும்.

**குடும்ப நலம்**

இத்திட்டத்தில் இலக்கு 100 % . இதில் 100 % நடப்பாண்டில் செய்யப்பட்டது. சுகாதார மேம்பாடு மற்றும் குடும்ப நலம் பற்றி அவ்வப்போது படக்காட்சி மற்றும்விளம்பர நோட்டீஸ் மூலம் விளக்கப்பட்டு வருகின்றன.

**நிவாரணப்பணி**

இந்நகராட்சியின் பராமரிப்பில் இயங்கி வரும் சித்தா மருத்துவமனையில் 1 மருத்துவ அலுவலர் மற்றும் 1 Jha;மை பணியாளர் பணிபுரிந்து வருகின்றனர். இத்தலைப்பின் கீழ் அறிக்கையாண்டில் செலவினம் ரூ. 2.64 இலட்சம் ஆகும். இது சென்ற ஆண்டில் ரூ. 2.50 இலட்சம் ஆகும்.

இந்நகரில் அரசு பொதுமருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனையில் அறிக்கையாண்டில் 2650 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உள்ளது.

ஒரு சுகாதார அலுவலர் மற்றும் 1 சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் 1 சுகாதார ஆய்வாளர் பணியிடம் காலியாக உள்ளது. 6 துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்களும் சுகாதாரப்பணியை ஆய்வு செய்து வருகின்றனர். 2021 – 2022 ஆம் ஆண்டு அறிக்கையாண்டில் ரூ. 94.00 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது . இது கடந்த ஆண்டில் ரூ. 87.00 இலட்சம் ஆகும்.

**உடல்நல பாதுகாப்பு**

சுகாதாரப்பணியாளர்களைக் கொண்டு சுகாதாரப்பணி செவ்வனே நடந்து வருகிறது. குப்பைகளை அப்புறப்படுத்த இந்நகராட்சிக்கு 17 வண்டிகள் , 2 டிராக்டர் , 1 ஆட்டோ , 3 பேட்டரி வண்டிகள் , 10 லாரிகள் , 1 மினி லாரி ஆகியவை சொந்தமாக உள்ளது. இவற்றில் தற்போது குப்பைகளை அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. நகரை சுத்தமாகவும், Jha;மையாகவும் வைத்துக் கொள்ளப்படுகின்றது.

**உரம் தயாரிப்பு**

இவ்வறிக்கையாண்டில் 18 மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த்து. அதில் பிளாஸ்டிக் பொருட்களும், கண்ணாடி துகள்களும், இரும்பு ஆணிகளும் சேர்ந்துள்ளதால் உரம் தயாரிக்கப்படவில்லை. தற்போது மக்கும் குப்பை, மக்காத குப்பை என இருவகைகளாக பிரித்து எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. MCC மையங்கள் 5 உள்ளது . உரத்தினை தயாரித்து விற்பனை செய்யப்படவில்லை. இதனால் கடந்த ஆண்டின் வருமானம் ரூ. 10,000/– ஆகும்.

**உணவுப்பொருள் கலப்படம்**

உணவு ஆய்வாளர் பணியிடம் இந்நகராட்சியில் உருவாக்கப்படாததால் உணவு மாதிரிகள் எடுக்கப்படவில்லை.

**கேடும் , அருவெறுக்கத்தரும் தொழில்கள்**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 249 மற்றும் 205 – இன் கீழ் உரிமம் வழங்கப்பட்டன. இவ்வறிக்கையாண்டில் 251 கடைகள் மற்றும் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டன. இதன் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 6,17,199/– ஆகும். அனைத்து நிறுவனங்களை அவ்வப்போது ஆணையாளர், சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்டு அவைகளுக்கேற்ற உரிமயாணைகள் வழங்கப்பட்டுள்ளது

**சந்தைகளும் , திருtpohக்களும்**

இந்நகராட்சியில் சிறப்பு சந்தைகள் மற்றும் திருவிழாக்கள் நடைபெறுவதில்லை .

**நகர் நலமும், பாதுகாப்பும்**

நகரில் அரசு சார்ந்த தீயணைப்பு நிலையம் ஒன்று உள்ளது. இவ்வறிக்கையாண்டில் தீயினால் இறந்தவர்கள் எவரும் இல்லை.

2021–2022 ஆம் நிதியாண்டில் நகர எல்லைக்குள் மட்டுமல்லாது சுற்றுப்புற கிராமங்களிலிருந்து கொரோனா – 19 என்ற கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டு பல நூற்றுக்கணக்காணோர் சிகிச்சை பெற்றதையடுத்து, மேலும், நோய் பரவாமல் தடுக்கும் வகையில் துரித தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொதுமக்களை நோயிலிருந்து பாதுகாக்கும் வகையில் கிருமிநாசினிகள், பினாயில் (லைசால்) தெளிக்கப்பட்டது. குடிநீரில் பிளீச்சிங் பவுடல் கலந்து வழங்கப்பட்டது.

**பேருந்துகளும் உரிமம் வழங்கலும்**

இந்நகரமன்ற நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சந்தைகள் , வண்டிமேடு பேருந்து நிலையம் மற்றும் மாடு அறுக்கும் தொட்டி மூலம் வருவாய்

| வருடம் | சந்தைகள் மற்றும் அனைத்து கடைகள் | வண்டிமேடு பஸ் நிலையம் | மாடு அறுக்கும் தொட்டி |
|---|---|---|---|
| 2019 – 2020 | 374 | – | 138740 |
| 2020 – 2021 | 374 | – | 148500 |
| 2021 – 2022 | 374 | – | 96130 |
| 2022 –2023 | 374 | – | 137810 |

**வண்டிப்பேட்டைகள் பேருந்து நிலையங்கள்**

இந்நகராட்சியினால் ஒரு வண்டிப்பேட்டைகளும், பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் தலா ஒன்றும் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது. பழைய பேருந்து நிலையத்தில் 16 இருக்கைகள் கொண்டு 2 பொதுமல அறையும், 1 பொது குடிநீர் குழாயும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தலைப்பின் கீழ் சாதாரணம் மற்றும் மூலதனம் சேர்ந்து கிடைத்த வருமானம் ரூ. 36000 ஆகும். இது சென்ற ஆண்டில் ரூ. 37775/– ஆகும். இந்நகரில் தனிப்பட்ட நபர்களால் வண்டிப்பேட்டைகள் நடத்தப்படவில்லை. மேலும், இரு சக்கர வாகன வசூல் இந்நிதியாண்டில் ரூ. 138265/– ஆகும்.

**மாடு அறுக்கும் தொட்டி**

நகராட்சியினால் மாடு அறுக்கும் தொட்டி பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இவ்வறிக்கையாண்டில் வருவாய் ரூ. 137810/– ஆகும்.

**மரம் நடுதல்**

நகராட்சி பொறியியில் பிரிவு சிப்பந்திகளால் 1 பூங்காக்கள் உள்ள மரம் மற்றும் செடிகள் பராமரிக்கப்படுகின்றன. இவ்வறிக்கையாண்டின்படி 20 மரங்கள் மற்றும் 45 செடிகள் உள்ளன. புதியதாக 135 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

**செலவினங்கள்**

நகராட்சிக்கு சொந்தமான வெங்கட்ராமன் பூங்கா தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்தலைப்னி கீழ் இவ்வறிக்காயாண்டில் பணியாளர்களின் ஊதியமாக ரூ. . . . . . . . . /– செலவு செய்யப்பட்டது. இது சென்ற ஆண்டில் ரூ. . . . . . . . . . . . ஆகும்.

**நாளங்காடி**

நகராட்சியின் பழைய மார்கெட் வளாகத்தில் இடித்துவிட்டு அந்த இடத்தில் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கடன் உதவிபெற்று 144 கடைகள் கட்டப்பட்டு, அரசு உத்தரவின்படி மேற்படி இடத்தில்பொது ஏலத்தின் மூலம் கடைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு வருமானம் சுமார் ரூ.27.50 இலட்சம் ஆகும்.

**குடிநீர் விநியோகம்**

இந்நகராட்சியில் பின்வரும் ஆதாரங்களை கொண்டு குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது.

1. கமண்டல நாகநதி நீரேற்று நிலையம்
2. தச்சூர் நீரேற்றும் நிலையம்
3. ஆற்காடு பாலாற்று குடிநீர் திட்டம்

**கமண்டலநாகநதி நீரேற்றும் நிலையம்**

இந்த நீரேற்று நிலையம் 1959 ல் ஆரம்பிக்கப்பட்டது. 1 நீர் உறிஞ்சி கிணறுகள், 1 நீர் சேகரிக்கும் கிணறு ஆகியவைகள் அமைக்கப்பட்டுள்ளன 17.5 குதிரை சக்தி திறன் கொண்டு மின்மோட்டார்கள் , மேலும் . .3 ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு தலா 15 குதிரை மற்றும் 15 எச்.பி. கொண்ட நீர்மூழ்கி மோட்டார்கள் மூலம் நீர் இரைக்கப்பட்டு வருகிறது.

**தச்சூர் நீரேற்று நிலையம்**

இந்நீரேற்று நிலையம் இந்நகரிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது . இதில் 3 உறிஞ்சி கிணறுகள் 15 HP குதிரை சக்தியுள்ள மின் மோட்டார்களுடன் கூடிய 40 HP உறை கிணகள் 5 HP குதிரைச சக்தி திறன் கொண்ட 2 மின் மோட்டார்கள் உள்ளது. ஓதலவாடியில் ஒரு நீர் உறிஞ்சி கிணறு 7.5 HP குதிரை திறன் கொண்டி ஒரு மின்மோட்டார் அமைக்கப்பட்டு நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. இவைகள் மூலம் நீர் சேகரிப்பு கொண்டு வந்து 40 HP குதிரை சக்தி திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் நீர் ஏற்றப்படுகிறது.

**ஆற்காடு பாலாற்று குடிநீர் திட்டம்**

ஆற்காடு பாலாற்று குடிநீர் திட்டம் 2017 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் செயல்படுத்தப்பட்டு நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது . இதன் திட்ட மதிப்பீடு ரூ. 3600 இலட்சமாகும். இந்நிலையத்தில் 6 உறிஞ்சு கிணறுகள் உள்ளது. இந்நிலையத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு 3.1 MLD நீர் இறைவு செய்யப்படுகிறது.

**மேல்நிலைநீர்த்தேக்க தொட்டிகள்**

| வ.எண் | விவரம் | கொள்ளளவு – லிட்டர் |
|---|---|---|
| 1. | அலுவலக வளாகம் | 8,00,000 |
| 2. | அலுலக வளாகம் | 5,00,000 |
| 3. | சைதாப்பேட்டை | 3,00,000 |
| 4. | இராமகிருஷ்ணாப்பேட்டை | 1,00,000 |
| 5. | அலுவலக வளாகம் | 6,00,000 |
| 6. | கண்ணகி நகர் | 4,00,000 |

**தரைமட்டத் தொட்டி**

**அலுவலக வளாகம் : 6.00 லிட்டர்**

**1.ஆழ்துளை குழாய் கிணறுகள் : 362 எண்ணிக்கை**

**2.பொதுகுழாய்கள் : 152 எண்ணிக்கை**

**3.பவர்பம்புகள் : 300 எண்ணிக்கை**

**ஆரணி நகராட்சி**

**<u>2022–2023 ஆம் ஆண்டு செய்யப்பட்ட திட்டப்பணிகள் மற்றும் மதிப்பீடு விவரம்</u>**

| வ.எண் | திட்டத்தின் பெயர் மற்றும் பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | **15 th CFC (Untied) சாலைகள்** | |
| 1 | **சிப்பம்–1**<br>ஆரணி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01, கல்லறை தெரு (Uni Code: 038001R236), வார்டு எண்.02, வி.ஏ.கே நகர் 4 வது குறுக்கு தெரு (Uni Code: 038002R199), வார்டு எண்.02, கே.பி.கே நகர் முதல் இடது தெரு (Uni Code: 038002R200), வார்டு எண்.02, எம்.ஜி.ஆர் நகர் (Uni Code: 038002R208), வார்டு எண்.08, காளத்தி அண்ணாமலை தெரு (Uni Code: 038008R010), வார்டு எண்.09, புது மசூதி தெரு (Uni Code: 038009R003) மற்றும் வார்டு எண்.25, விநாயகர் கோவில் குறுக்கு தெரு (Uni Code: 038025R016) பகுதிகளில் சிமெண்ட் சாலைகளை மறுசீரமைக்கும் பணி. | 35.00 |
| 2 | **சிப்பம்–2**<br>ஆரணி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, சைதை பள்ளிகூட தெரு (Uni Code: 038012R186), வார்டு எண்.14, அண்ணாநகர் 3வது குறுக்கு தெரு (Uni Code: 038014R071), வார்டு எண்.15, நாடகசாலை பேட்டை 1வது தெரு (Uni Code: 038015R065), வார்டு எண்.15, நாடகசாலை பேட்டை 2வது தெரு (Uni Code: 038015R066), வார்டு எண்.15, நாடகசாலை பேட்டை 4வது தெரு (Uni Code: 038015R068), வார்டு எண்.19, மாரியம்மன் கோவில் தெரு (Uni Code: 038019R132) மற்றும் வார்டு எண்.22, தணிகாசலம் தெரு (Uni Code: 038022R011) பகுதிகளில் சிமெண்ட் சாலைகளை மறுசீரமைக்கும் பணி. | 38.00 |
| | **15 th CFC (Tied Grand)** | |
| 3 | ஆரணி நகராட்சிக்கு இலகு ரக வாகனம் (TATA ACE) 12 எண்ணிகையில் வாங்குதல் பணி. | 87.60 |
| 4 | ஆரணி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்த முதன்மை சேகரிப்பு பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் 13 எண்ணிகையில் வாங்குதல் பணி. | 26.00 |

| | | |
|---|---|---|
| | **MP FUND** | |
| 5 | ஆரணி நகராட்சியில் வார்டு 01, ஜெயலக்ஷ்மி நகர் சிறுவர் பூங்காவில் சிறிய உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல் | 4.35 |
| 6 | ஆரணி நகராட்சியில் சராப் கடைத்தெரு பெருமாள் கோவில் அருகில் சிறிய உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல் | 4.35 |
| 7 | ஆரணி நகராட்சியில் வார்டு 27, தர்மராஜா கோவில் தெருவில் சிமெண்ட் சாலை மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 8.50 |
| | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி திட்டம் (CMBF Scheme)** | |
| 8 | இந்நகராட்சி அரசு மருத்துவமனை சாலை நகராட்சி அலுவலக வளாக பகுதியில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலைமச்சர் அவர்களின் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த சமையற் கூடமாக மாற்றி கட்டமைக்கும் பணி. | 8.25 |
| | **சாலைகள் மேம்பாட்டு திட்டம்(NSMT)** | |
| 9 | ஆரணி நகரட்சிகுட்பட்ட பகுதிகளில் சாலைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த வார்டு எண்.1 முதல் 33 வரை பழுதடைந்த சிமெண்ட் சாலைகளை தேர்ந்தெடுத்து மறு சீரமைத்தல் பணி. | 180.00 |
| 10 | ஆரணி நகரட்சிகுட்பட்ட வார்டு எண்கள் 18 மற்றும் 20 ஆகிய சாலைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த பழுதடைந்த தார் சாலைகளை தேர்ந்தெடுத்து மறு சீரமைத்தல் பணி. | 8.00 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் மற்றும் பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில் ) |
|---|---|---|
| 11. | கட்டடம்<br>நகர ஆரம்ப சுகாதார மையம் 1 அமைத்தல் | 2.50 |
| 12. | பூங்கா – ஆரணி நகராட்சியில் பையூர் கிராமம் வேலப்பாடி பயோமிங் தளத்தில் மரங்களுக்கு தோட்டம் வழங்குதல் | 0.38 |
| 13. | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் ஒத்தவாடை தெரு, முருகா நகர் 1,3, எம்.ஜி.ஆர் நகர் II, தேனருவி நகர் 2வது குறுக்கு தெரு, பாஸ்கர் நகர் II ஆகிய பகுதிகளில் சாலைகள் அமைத்தல் | 81.91 |
| 14 | பிச்சாண்டி நகர் – 3 சாலைப்பணி மேற்கொள்ளுதல் | 4.00 |
| 15 | வார்டு எண். 10, கைலாயநாதர் கோவில் அருகில் அறிவுசார் மையம் கட்டுதல் பணி | 188.25 |
| 16. | ஆரணி நகரில் வார்டு 1 மற்றும் பிளாக் சி, நகரளவு எண். 33 காஸ்கர் நகரில் பூங்கா அமைத்தல் | 1200 |
| 17. | ஆரணி நகரில் வார்டு 1 மற்றும் பிளாக் சி நகரளவு எண். 11 ஜெயலட்சுமி நகரில் பூங்கா அமைத்தல் | 48.00 |
| 18. | நமக்குநாமே திட்டம் வார்டு – 1 ஜெயலட்சுமி நகரில் புயல் நீர் வடிகால் அமைத்தல் மற்றும் மண்ணால் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 6.00 |
| 19. | வார்டு 2 ல் KPK நகரில் புதிய குழந்தைகள் பூங்காவை வழங்குதல் | 24.50 |
| 20. | வார்டு – 25 அருணகிரிசத்திரம் விநாயகர் கோவில் தெருவில் புயல் நீர் வடிகால் அமைத்தல் மற்றும் மண்ணால் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைத்தல் | 10.75 |
| 21. | கார்த்திகேயன் சாலையில் உள்ள RC ஆண்கள் துவக்கப் பள்ளியில் சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 8.00 |
| 22. | பவர் அவுஸ் தெருவில் சாலை புனரமைத்தல் | 1.00 |
| 23. | வார்டு – 28 வேதபுரீஸ்வரர் கோயில் தெருவில் நீர் வடிகால் மற்றும் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைத்தல் | 13.50 |
| 24. | வார்டு – 28 கோகுலபாலன் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 9.00 |
| 25. | வார்டு – 28 சின்ன தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 4.20 |
| 26. | சுற்றுச்சுழல் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் சூரியகுளத்தை (டேங்க்) மேம்படுத்துதல் | |

**வரியினம்**

| 2022–2023 ஆம் அறிக்கையாண்டில் நடப்பு வரியினத்தில் | : | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| அறிக்கையாண்டு கேட்பு | : | 1112.62 |
| அறிக்கையாண்டின் வசூல் | | 511.50 |
| வசூல் சதவீதம் | : | 601.13 |

**வரியில்லா இனம்**

| 2022–2023 ஆம் அறிக்கையாண்டில் நடப்பு வரியினத்தில் | : | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| அறிக்கையாண்டு கேட்பு | : | 998.13 |
| அறிக்கையாண்டின் வசூல் | | 245.73 |
| வசூல் சதவீதம் | : | 24.62% |

**தணிக்கை**

2001 – 2002 ஆண்டு முதல் 2021 – 2022 ஆம் ஆண்டு வரை மொத்தம் 609 தணிக்கைத்தடை பத்திகள் நிலுவையாக உள்ளன. இவற்றில் 82 நீக்கம் செய்யப்பட்டு மீதமுள்ள 527 நிலுவையில் உள்ளது. இந்நகராட்சியில் அடுத்து நடைபெறும் கூட்டமர்வின் போது மேற்படி நிலுவைத்தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்ய போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**வழக்கு**

குத்தகை இனங்களில் 3 வழக்குகள் நிலுவையாக உள்ளது. மேற்படி வழக்குகளை விரைவில் முடித்து தருமாறு நகராட்சி வழக்கஞர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது.

**நேருவேலை வாய்ப்பு திட்டம்**

நேருவேலை வாய்ப்பு திட்ட குடிசை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடன் தொகை வசூல் செய்ய வழக்குகள் நிலுவையில் ஏதும் இல்லை

**பொது வருவாய்**

**வருவாய் கணக்கு**

**இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு வரிகள்விதிக்கப்பட்டு வருகின்றன.**

**<u>சொத்துவரி பிரிவு 81 – இன் கீழ்</u>**

**1. வருவாய் கணக்கு : 6.5%**

**2. நீரளிப்பு வரி, சாக்கடை வரி : 8.5%**

**3. கல்வி வரி : 2.5%**

**4.நுலகவரி : 1.5%**

**மொத்தம் 2022 – 2023 ஆம் ஆண்டில் சொத்துவரி விதிப்புக்களின் 15856 எண்ணிக்கை ஆகும். சொத்து வரி விகிதம் 54.26**

**தொழில்வரி பிடித்தம்**

**( குறிப்பு : மாத ஊதியத்தில் ( அடிப்படை சம்பளம், அகவலைப்படி மற்றும் இதர படிகள் ) Gross amount) கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை .**

| வ.எண் | 6மாத சம்பளங்கள் | அரையாண்டிற்கான வரி விதிதம் |
|---|---|---|
| 1 | ரூ.1/– முதல் ரூ.2100/– வரை | இல்லை |
| 2 | ரூ.2101/– முதல் ரூ.30000/– வரை | 183/– |
| 3 | ரூ.30001/– முதல் ரூ. 45000/– வரை | 473/– |
| 4 | ரூ.45001/– முதல் ரூ. 60000/– வரை | 918/– |
| 5 | ரூ.60001– க்கு மேல் | 1250/– |

**சென்ற ஆண்டில் 15 இனங்களுக்கு தொழில்வரி விதிக்கப்பட்டுள்ளது . 2022 – 2023 ஆம் ஆண்டில் 23 இனங்களுக்கு தொழில்வரி விதிக்கப்பட்டுள்ளது.**

**குடிநீர் கட்டணம்**

**நகராட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து வீடுகள் , தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசுக் கட்டிடங்கள் ஆகியவற்றுக்கு குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. குடியிருப்பிற்கு மாதம் ரூ.100, வணிக நிறுவனங்களுக்கு ரூ. 250, தொழில்நிறுவனங்களுக்கு ரூ. 250 என கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது. 2021 – 2022 ஆம் ஆண்டு மூலம் கட்டணம் ரூ. 4.14 இலட்சம் ஆகும். மொத்த இணைப்புகளின் எண்ணிக்கை 69 ஆகும்.**

**நகரமைப்புப்பிரிவு**

**நகரமைப்பு பிரிவில் 1 நகரமைப்பு ஆய்வாளர் பணிபுரிந்து வருகின்றனர். நகரமைப்பு அலுவலர் இரண்டாம் நிலை பணி தற்போது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி எல்லைகளுக்குள் 2 நகரமைப்பு திட்டங்கள் உள்ளன.**

**முழுமைத்திட்டம்**

**ஆரணி முழுமைத்திட்டத்திற்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையில் 18.12.1989 ஆம் தேதிய அரசாணை எண். 1171 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 5 ருடத்திற்கு பின் தற்போதைய நிலப்பயன்படி , மறு ஆய்வு செய்து திருத்திய முழுமைத்திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிலங்கள் மற்றும் கட்டிடங்களின் மேம்பாடுகளுக்கு திட்ட அனுமதி வழங்க, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையில் 12.06.1996 ம் தேதிய அரசாணை எண். 396 – இன்படி அபிவிருத்திக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.**

**கடன்கள்**

| வ.எண். | 31.03.2023ல் | நிலுவை கடன் | திரும்ப பெற்ற தொகை | நிலுவை |
|---|---|---|---|---|
| 1. | HUDCO/TUFIDW | 10645118 | 0 | 10645118 |
| 2. | TUFIDW/UIDSSMI | 100000 | 0 | 100000 |
| 3. | TUFIDCO/SRP | 14662000 | 0 | 14662000 |

31.03.2023 முடிய அரசினரிடமிருந்து வாங்கி கடன் தொகை திருப்பி செலுத்யி விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | 01.04.2009 – இல் நிலுவையில் உள்ள மொத்த கடன் தொகை | அறிக்கையாண்டில் திருப்பி செலுத்திய தொகை | 31.03.2022 நிலுவை |
|---|---|---|---|
| அரசுக்கடன்கள் (ஒருங்கிணைக்கப் – பட்டவை ) | இல்லை | தமிழக அரசாணை எண். 149, நாள் 09.11.2007 – இல் கடன் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டது | இல்லை |

**முதலீடுகள்**

2022 - 2023 ஆம் அறிக்கையாண்டில் முதலீடுகள் எதுவும் இல்லை.

**கணக்கு அறிக்கை**

2022 - 2023 ஆம் ஆண்டுக் கணக்கு தணிக்கைத் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**பொது குறிப்பு**

நகராட்சி நிர்வாகம் மேம்பட ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், நகரமன்ற தலைவர், நகரமன்ற துணைத் தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இடம் : நகராட்சி அலுவலகம்,

நாள் : 30.06.2023

30/6/23

ஆணையாளர்,

ஆரணி நகராட்சி.

30/6/23